# அதிமேற்றிராணியார் மிக.வந்.மார்செல் லெஃபவர் ஆண்டகையின் 1974-ம் ஆண்டு அறிக்கை

(1974-ம் ஆண்டு நவம்பர் 11-ம் நாளன்று, உரோமையிலிருந்து இரண்டு அப்போஸ்தலிக்க ஆய்வாளர்கள் ஈக்கோனிலுள்ள அர்ச்.10-ம் பத்திநாதர் சபையின் சர்வதேச குருமடத்தை ஆய்வு செய்ய வந்தனர். அங்கு தங்கியிருந்த ஒரு சில நாட்களில், "திருமணம் ஆன நபர்கள் குருப்பட்டம் பெறுவது சாதாரண காரியமாகிவிடும், நிலைத்த மாறாத உண்மை என்பது எதுவுமே இல்லை, நமதாண்டவரின் உயிர்ப்பு சந்தேகத்துக்குரியது" போன்ற தப்பறையான கருத்துக்களை குருமாணவர்களிடமும், குருமட பேராசிரியர்களிடமும் கூறினார்கள். அவர்களின் இந்த அவதூறுகளுக்கு எதிராக, நவீனத்தை மறுத்து அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகையவர்கள் இந்தப் புகழ்பெற்ற அறிக்கையை வெளியிட்டார்.)

...........................

"கத்தோலிக்க உரோமாபுரியை முழு இருதயத்துடனும் முழு மனதுடனும் நாம் உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ளோம். நித்திய உரோமாபுரியை, ஞானத்திற்கும் சத்தியத்திற்கும் ஆசிரியையாயிருந்து, கத்தோலிக்க விசுவாசத்தினுடையவும், அதைக் காப்பாற்றுவதற்குத் தேவையான பாரம்பரியத்தினுடையவும் பாதுகாப்பாக இருக்கிற உரோமாபுரியை நாம் திடமாகப் பற்றிக்கொண்டுள்ளோம்.

"ஆனால், நவீன, புராட்டஸ்டாண்ட் சார்பான உரோமாபுரியைப் பின்பற்ற மறுக்கிறோம். எப்போதும் மறுத்தே வந்திருக்கிறோம். இந்த நவீன புராட்டஸ்டாண்ட் சார்பு 2-ம் வத்திக்கான் சங்கம் நடைபெற்ற போதும், அதற்குப் பிறகும், அதிலிருந்து புறப்பட்ட எல்லா சீர்திருத்தங்களிலும் இது மிகத் துலக்கமாகக் காணப்படுகிறது.

"இதன் விளைவாக, இந்த சீர்திருத்தங்கள் திருச்சபையின் அழிவிற்கும், திவ்விய பலிபூசை, தேவ திரவிய அநுமானங்களின் அகற்றுதலுக்கும், துறவற வாழ்வு மறைவிற்கும் ஏதுவாகியுள்ளது. பல்கலைக்கழகங்களிலும்,

குருமடங்களிலும், ஞானோபதேசத்திலும், இயற்கைவாத, தெயார் தெ ஹார்தான் (Teilhard De Chardin)  பாணியிலான கல்விக்கு ஏதுவாகியுள்ளன. இந்த வகைப்போதனையானது விடுதலை மனப்பான்மை, புராட்டஸ்டாண்டிசம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது. இது திருச்சபையின் போதக ஆசிரியத்தால் (Magisterium) பலமுறை கண்டிக்கப்பட்டது.

"19 நூற்றாண்டுகளாக மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டு, திருச்சபையின் ஆசிரியத்தால் அனுசரிக்கப்பட்டு வந்துள்ள நம் கத்தோலிக்க விசுவாசத்தை, விட்டுவிடவோ அல்லது அதைக் குறைக்கவோ எந்த அதிகாரமும், திருச்சபையின் மிக உயர்ந்த அதிகாரமும் கூட நம்மை வற்புறுத்த முடியாது. "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, பரலோகத்திலிருந்து வருகிற தேவதூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவான்" (கலா.1:8)

"இதையன்றோ, பரிசுத்த தந்தை இன்று நமக்கு மீண்டும் கூறி வருகிறார். அவருடைய வார்த்தைகளிலும், செயல்களிலும் உரோமை திருச்சங்கங்களின் செயல்பாடுகளிலும் ஒருவகையான முரண்பாடு இருக்குமானால், அப்போது நாம், எப்போதும் நமக்குக் கற்பிக்கப்பட்டு வந்துள்ளவற்றை ஏற்றுக்கொண்டு, திருச்சபையை அழிக்கிற நவீனங்களுக்குக் காதுகொடுக்க மறுப்போம்.

"விசுவசிக்கும் நியதி (Lex credenda) மாற்றமடையாமல், வழிபடும் நியதியை (Lex orandi) ஆழமாக மாற்றம் செய்வது முடியாத காரியம். புதிய பூசைக்கு ஏற்ற புதிய ஞானோபதேசம், புதிய குருத்துவம், புதிய குருமடங்கள், அருங்கொடை, பெந்தகோஸ்தலிசம் ஆகியவை தோன்றியுள்ளன. இவையெல்லாம் உண்மையான விசுவாசக் கொள்கைக்கும், மாறுபடாத திருச்சபையின் போதகத்திற்கும் எதிராக உள்ளன. விடுதலை வாதத்திலிருந்தும் நவீன கொள்கையிலிருந்தும் புறப்பட்டு வந்துள்ள இந்த சீர்திருத்தம் முழுவதும் விஷம் ஏறியதாக, பழுதுபட்டதாக உள்ளது. இச்சீர்திருத்தத்தின் எல்லா செயல்களும் வெளிப்படையான பதிதமாக இல்லாவிடினும் அவை பதிதத்திலிருந்து பிறந்து பதிதத்திற்கே கொண்டு செல்கின்றன.

"ஆதலால் இந்த சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்வதும், எவ்வகையிலேனும் அதற்கு பணிந்து கொடுப்பதும், மனச்சாட்சியுள்ள எந்தக் கத்தோலிக்கனாலும் கூடாததாயிருக்கிறது. நாம் இரட்சணியம் அடைவதற்கு ஏதுவாக திருச்சபைக்கும் கத்தோலிக்க சத்தியத்திற்கும் பிரமாணிக்கமாயிருக்க வேண்டுமானால், இந்த சீர்திருத்தத்தை திடமாக மறுத்துவிட வேண்டும்.

"ஆகவேதான், நாம் புரட்சி செய்யாமல், கசப்பில்லாமல், வெறுப்பு கொள்ளாமல், என்றும் மாறாத திருச்சபையின் போதக ஆசிரியத்தின் வழிகாட்டுதலில் குருக்களை உருவாக்கும் அலுவலைத் தொடருகிறோம். கத்தோலிக்கத் திருச்சபைக்கும், பரிசுத்த பிதா பாப்பரசருக்கும், வருங்கால சந்ததிகளுக்கும் இதைவிடப் பெரிய ஊழியம் செய்யப்பட முடியாது என உறுதியாக எண்ணுகிறோம்.

"இதனாலேயே நாம் திருச்சபையால் ஒரே சீராகப் போதித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறதும், நவீனம் புகுவதற்கு முன் வெளியான புத்தகங்களில் முறைப்படுத்தி எழுதப்பட்டுள்ளதுமான விசுவாசம், நல்லொழுக்கம், தேவ வழிபாடு, ஞானோபதேசம், குருக்களை உருவாக்குதல், திருச்சபையின் நிறுவனம் ஆகியவற்றிற்கு ஏதுவானவற்றையெல்லாம் நித்திய உரோமையை மறைத்திருக்கிற இருளை பாரம்பரியத்தின் உண்மையான ஒளி அகற்றும் வரையிலும் திடமாகப் பற்றிக்கொள்வோம்.

"சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தாலும், பரிசுத்த கன்னிமரியம்மாள், அர்ச்.சூசையப்பர், அர்ச்.10-ம் பத்திநாதர் இவர்களின் உதவியாலும் இப்படி நாம் செய்யும் போது, உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இராயப்பரின் வாரிசில் வரும் அனைத்து பாப்புமார்களுக்கும் நாம் பிரமாணிக்கமுள்ளவர்களாக இருக்கிறோமென்றும், இஸ்பிரீத்துசாந்துவானவரில், "சர்வேசுரனுடைய பரம இரகசியங்களைப் பகிர்ந்து கொடுக்கிறவர்களாக" (1கொரி.4:1) இருக்கிறோமென்றும் நிச்சயமாயிருக்கிறோம். ஆமென்."

**+ மார்செல் லெஃபவர்**